## தமிழ்நாடு அரசு

### சுருக்கம்

அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அரசு அலுவலக வேலை நாட்கள் – மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பநி–ஏ) துறை

அரசாணை நிலை எண். 342 நாள்: 15-6-1989

படிக்கப்பட்டது:

1. அரசாணை நிலை எண் 550 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (பநி–ஏ) துறை நாள் 28.5.85.
2. நிதிச் செயலாளரின் நேர்முக கடித எண் 937/எப்எஸ்/89 நாள் 14-6-1989.

----

ஆணை:

பார்வை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் அரசு அலுவலகங்களில் வாரம் ஐந்து நாட்கள் பணிமுறை செயலுக்கு கொண்டு வரப்பட்டு எல்லா அரசு அலுவலகங்களிலும் சனிக் கிழமைகளும், ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாக ஆணையிடப்பட்டது. ஐந்தாவது ஊதியக்குழுவின் பரிந்துரையினை அரசு ஏற்று மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக் கிழமைகள் தவிர மற்ற எல்லா சனிக்கிழமைகளும் அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு வேலை நாட்களாக மாற்றி அரசு ஆணையிடுகிறது. அதன்படி, 1-7-1989 முதல் இப்பணி முறை செயலுக்கு வரும்.

2. பார்வை 1-ல் கண்டுள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தற்போது நடைமுறையில் உள்ள வேலை நேரத்தில் எவ்வித மாறுதலும் இல்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். எம். இராஜேந்திரன்,
அரசு தலைமைச் செயலாளர்.

பெறுநர்:

அனைத்து செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்து தலைமைத் துறைகள், சென்னை.
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள், குற்றவியல் நீதிபதிகள்.
பதிவாளர், உயர் நீதிமன்றம், சென்னை-1.
செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணைக்குழு, சென்னை-2.

ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.

த.பி.பா.

சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5.
காவல் துறை ஆணையர், சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர், (வடக்கு, தெற்கு, கிழக்கு) சென்னை
அனைத்து தமிழ்நாடு அரசு நிறுவனங்கள்,/வாரியங்கள்
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-9/சென்னை-35.

நகல்:

இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை-9.

செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை-9
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை-9

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

வி.கி. சுகன்யா
15/6/89
பிரிவு அலுவலர்